



முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் குறிஞ்சி இல்லத்தில் நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1000 ஆவது இதழின் பிரதியை துணை முதலமைச்சரும், இளைஞரணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், ப.அப்துல் மாலிக், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா மற்றும் அன்பகம் செந்தில், முரசொலி நாளிதழின் பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், செய்தி ஆசிரியர் கு.சேது, கட்டுரையாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசகர் கோவி.லெனின், மாணவர் அணியின் துணைச் செயலாளர் கா.அமுதரசன், செய்தி தொடர்புக் குழு துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, ஓவியர் ரவி பேலட், பாசறை ஆசிரியர் குழுவினர் நீரை.மகேந்திரன், ர.பிரகாசு, கௌதம் ராஜ், சு.கதிரேசன், பா.கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

### ஆஸ்திரேலியாவில் தங்கப் பதக்கங்கள் குவித்துள்ள

# தமிழ்நாட்டு வீரர்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, அக். 27 -**

**ஆஸ்திரேலியாவில் பதக்கங்களை குவித்துள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த வீரர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு : -**

ஆஸ்திரேலியாவில் நடைபெறும் Badminton International Championshipஇல் தங்க வேட்டையை நிகழ்த்திக் காட்டி, பதக்கங்களைக் குவித்துள்ள நம் தமிழ்நாட்டு Para Badminton வீரர்களின் அபாரச் சாதனைக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

மேலும் மேலும் நீங்கள் பெற்று வரும் வெற்றிகளால், விளையாட்டுத் துறையில் உலக அளவில் தமிழ்நாடு தலைசிறந்து வருவது உறுதியாகி வருகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### 2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு

# தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு மறு ஆய்வு செய்யப்படும்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிக்கை!



*சென்னை, அக்.27-*

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் 15.10.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்த உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு குறித்து சமூக ஊடகங்களிலும், பொது வெளியிலும் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் இப்பொருள் குறித்து சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகி றேன்.

தற்போது தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் சதவீதம் இந்தியாவிலேயே அதிகபட்சமாக உள்ள நிலையில், மேலும் அதிகமான எண்ணிக்கையில் உயர்கல்வி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் துவக்கப்படுவதற்கான தேவை உள்ளது என்பதை அனைவரும் அறிவோம்.

இந்தச் சூழ்நிலையில் தற்போது இயங்கிவரும் தனியார் கல்வி நிறுவ னங்கள், மாநில தனியார் பல்கலைக்கழகங்களாக உயர விழையும்போதும், புதிதாக தனியார் பல்கலைக்கழகங்கள் தொடங்குவதற்கும் தற்போதுள்ள சில வழிமுறைகளை எளிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டது.

**உரிய சட்ட பாதுகாப்புகள்!**

அதேசமயம் இச்சட்டத்திருத்தத்தில் இவ்வாறு தனியார் பல்கலைக்கழகங்கள் உருவாகும்போது அதனால் மாணவர்கள் நலனோ, பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் நலனோ, எந்த வகையிலும் பாதிக்கப்படாத வண்ணம் உரிய சட்ட பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

உயர்கல்வியை பொறுத்த வரை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்ந்துவரும் தமிழ்நாட்டில், தற்போதுள்ள தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டம் 2019, பிரிவு 4இன் படி, தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு குறைந்தபட்ச நில அளவு 100 ஏக்கர் தொடர்ச்சியான நிலம் தேவைப்படுகிறது.

ஆனால் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அத்தகைய மிகப் பெரிய அளவிலான தொடர்ச்சியான நிலத்தை அடையாளம் காண்பது மிகவும் கடினமாக உள்ளது.

எனவே, வேகமாக நகரமயமாகி வரும் தமிழ்நாட்டில் நிலங்களின் மதிப்பும் உயர்ந்து வருவதால் புதிய பல்கலைக்கழகங்களைத் தொடங்குவதற்கும், பெரிய கல்லூரிகள் பல்கலைக்கழகங்களாக தங்களை மாற்றிக் கொள்ள / தரம் உயர்த்திக் கொள்ள விழையும் போதும் மேற்படி குறைந்தபட்ச நில அளவின் தேவை ஒரு சவாலாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் பிற அண்டை மாநிலங்களின் தனியார் பல்கலைக்கழகங்களின் சட்டங்களுக்கு இணங்க, நிலத்தின் அளவு குறைக்கப்பட்டால், பல்கலைக்கழகங்களாக மாற விரும்பும் தனியார் கல்வி நிறுவனங்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படும் என்ற கருத்துகள் பெறப்பட்டன.

இதன் மூலம், புதிய தனியார் பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் அமைவதையும், விதிமுறைகளின்படி தகுதியுள்ள தனியார் கல்லூரிகள் மாநில தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்றம் பெறுவதையும் ஊக்குவிக்க முடியும். எனவே, மாணவர் சமூகத்தின் நலனுக்காகவும், மாநிலத்தில் உயர்கல்வியை மேலும் மேம்படுத்தவும், தமிழ்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குத் தேவையான நிலங்கள் தொடர்பான விதி முறைகளை எளிமைப்படுத்த இந்த சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

**சமூகநீதி – உயர்கல்வியில் ஆழ்ந்த அக்கறை கொண்ட திராவிட மாடல் அரசு!**

இந்தப் புதிய சட்டமுன்வடிவின்படி குறைந்தபட்ச நில அளவு கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது;

மாநகராட்சி - 25 ஏக்கர், நகராட்சி அல்லது பேரூராட்சி - 35 ஏக்கர், பிற பகுதிகள் - 50 ஏக்கர்.

சமூக நீதியிலும் உயர்கல்வி மேம்பாட்டிலும் ஆழ்ந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட திராவிட மாடல் அரசு, எந்த நிலையிலும் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாது. ஆசிரியர் நியமனம் மற்றும் மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீட்டை பின்பற்றுவது, கல்விக் கட்டணத்தை அரசே நிர்ணயிப்பது, பணியாளர் நலனை பாதுகாப்பது போன்ற அம்சங்களை உத்தரவாதப்படுத்தியும், தமிழ்நாட்டின் பாரம்பரிய கல்லூரிகள் அடுத்த உயர்நிலையை எட்டுவதை மனதில் கொண்டு இந்த சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதேசமயம் மாநில இடஒதுக்கீட்டு உரிமையை கருத்தில்கொள்ளாத நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு இதுகாறும் நம் அரசு அனுமதி அளிக்கவில்லை என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

இருப்பினும், இப்பொருள் குறித்து சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும், சமூக ஊடகங்களிலும், பொது வெளி யிலும் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையிலும் இந்தச் சட்ட முன்வடிவு குறித்து கல்வியாளர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள், கல்வித் துறை அலுவலர்கள் ஆகியோரின் கருத் துக்களைப் பெற்று, அதன் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை தொடரலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி இந்தச் சட்டமுன்வடிவு திரும்பப் பெறப்பட்டு உரிய மறு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தி.மு.க. மாணவர் அணி மாநில செயலாளர் இரா.ராஜீவ்காந்தி பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். இதில் இரா.தமிழரசன், கே.மனோகரன், சத்தியமூர்த்தி, இரா.சித்தார்த்தன், ஒன்றிய செயலாளர்கள் முத்துக்குமார், சரவணன், பிரபுராஜசேகர், சக்திவேல், சிவப்பிரகாசம், சந்தோஷ்குமார், மாது, இராசு.தமிழ்செல்வன், சந்தர், முனுசாமி, பிரபு, புனிதா, சுர்ஜித்,மற்றும் 500 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில்

### இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும்

# முரசொலி நாளிதழ் பாசறைப் பக்கம் 1,000 -வது இதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, அக்.27-**

**சென்னை குறிஞ்சி இல்லத்தில், தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1,000 -வது இதழின் பிரதியை, தமிழ்நாடு துணை முதலமைச்சரும் இளைஞர் அணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்து பெற்றார்.**

முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்தபிள்ளையாம் முரசொலியில், இன்றைய இளம் தலைமையினரை ஈர்க்கும் வகையில், தி.மு.கழக இளைஞர் அணியால் உருவாக்கப்பட்ட `பாசறை' பக்கத்தை தி.மு.கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 14.01.2023 அன்று தொடங்கி வைத்தார்.

**பாசறைப் பக்கம் - 1,000**

நீதிக்கட்சியில் தொடங்கி தி.மு.க. வரலாற்றை, ஓவியங்களால் விவரிக்கும் `திராவிடத்தால் வாழ்கிறோம்' , கழக முன்னோடிகளைப் பற்றிய `உடன் பிறப்பே', கலைஞரோடு நெருங்கிப் பழகியவர்களின் உணர்வுபூர்வமான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் `கலைஞரும் நானும்', திராவிட இயக்கப் பெண்களைப் பற்றிய `திராவிடப் போராளிகள்', கலைஞர் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைக்கும் `இடம்-பொருள்-கலைஞர்', திராவிட மாடல் அரசின் சாதனைகளை உச்சி நுகரும் `திராவிட மாடல் அரசு', சிறுபான்மையினருடன் கழகத்துக்கு இருக்கும் உறவைப் பற்றிப் பேசும் `மைனாரிட்டி தி.மு.க.' இடஒதுக்கீடுவரலாற்றினை விவரிக்கும் `எல்லோருக்கும் எல்லாம்' என 22 தொடர்கள் இதுவரை பாசறைப் பக்கத்தில் வெளியாகி பேராதரவைப் பெற்றுள்ளது.

பேராசிரியர் ஜெயரஞ்சன், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் அருள்மொழி, கோவி. லெனின், மருத்துவர் எழிலன், வீ.எம்.எஸ். சுபகுணராஜன், எம். எம்.அப்துல்லா உட்பட 16 பேர் பாசறைப் பக்கத்தில் தொடர்கள் எழுதி உள்ளனர். இயக்க வரலாறு- கொள்கைகள்- சாதனைகள் ஆகியவற்றை இளைஞர்களிடம் கொண்டுசேர்க்கும் பணியைச் சிறப்போடு செய்துவரும் பாசறைப் பக்கம் ஆயிரமாவது நாளை எட்டியுள்ளது.

**முதலமைச்சர் வாழ்த்து**

அதையொட்டி, சென்னை குறிஞ்சி இல்லத்தில், தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம், நேற்று முன்தினம் (25.10.2025) முரசொலி நாளிதழில் இளைஞர் அணி சார்பாக வெளியிடப்பட்டு வரும் பாசறைப் பக்கத்தின் 1,000 -வது இதழின் பிரதியை, தமிழ்நாடு துணை முதலமைச்சரும் இளைஞர் அணியின் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், ப.அப்துல் மாலிக், க.பிரபு, பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி. ராஜா மற்றும் அன்பகம் செந்தில், முரசொலி நாளிதழின் பொது மேலாளர் எஸ்.ராஜசேகரன், செய்தி ஆசிரியர் கு.சேது, கட்டுரையாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசகர் கோவி. லெனின், மாணவர் அணி துணைச் செயலாளர் கா.அமுதரசன், செய்தி தொடர்புக் குழு துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா, ஓவியர் ரவி பேலட், பாசறை ஆசிரியர் குழுவினர் நீரை.மகேந்திரன், ர.பிரகாசு, கௌதம் ராஜ், சு.கதிரேசன், பா.கோபி ஆகியோர் உடனிருந்தனர்.

## கொளத்தூரில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுமானப் பணிகள்!

*சென்னை, அக்.27-*

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (25.10.2025) சென்னை கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டடம், இராஜாஜி நகரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் இக்கல்லூரிக்கு ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய கல்லூரி கட்டடம் கட்டுவதற்கு கடந்த 23.12.2024 அன்று அடிக்கல் நாட்டினார். வரும் கல்வி யாண்டில் கல்லூரி வகுப்புகள் புதிய கட்டடத்தில் நடைபெறும் வகையில் கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.



ஈரோடு வடக்கு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதியில் மிக கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளை மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அதிகாரிகளிடம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள உடனிருந்து நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினார். அதுபோது, சத்தியமங்கலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஐ.ஏ.தேவராஜ், ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கந்தர்வக்கோட்டை அன்னவாசலில் மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளருமான எம்.மணவழகன், கீரைதமிழ் ராஜா ஆகியோர் முன்னிலையில் பாக முகவர்கள் (BLA2), பாக குழு உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து ஏற்பாட்டில் டி.செல்வம், கை. பழனிச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள், பாக குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.